# “மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்! கங்கையே சூதகமானால் எங்கே போவது?”

**ஜ**னநாயக ஆட்சிமுறை என்பது பெரும்பான்மை மக்களின் எண்ணங்களின் அடிப்படையில், ஆட்சியை உருவாக்கும் முறையாகும். ஆம்! பெரும்பான்மை மக்கள் எண்ணங்களின் பிரதிபலிப்புத்தான் மக்களாட்சியாகும் (Democratic Government). ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்ட எந்தவொரு நாடானாலும், மக்களின் ஆட்சிமுறைக்கான எண்ணங்களை தீர்மானிப்பது தேர்தல் முறைதான். குறிப்பாக, இந்திய அரசியல் சட்டம் (Constitution of India) ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டுள்ளமையால், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல்கள்மூலம் மக்களின் பெரும்பான்மை அடிப்படையில் ஒன்றியத்திலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் அமையும் தேர்தல்கள்மூலம் மக்களின் பெரும்பான்மையை நடுநிலையோடு தீர்மானிக்கும் தன்னிச்சையான (Independent Body) நிறுவனமாக இந்திய அரசியல் சட்டத்தில் தேர்தல் ஆணையம் (Election Commission vide Article 324 of the Constitution) உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் ஆணையம் அரசியல் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற சுதந்திரமான நிறுவனமாகும். இன்றைய நிலவரப்படி தேர்தல் ஆணையத்தில் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் ஆணையத்தின் தலைவர், மற்றைய இருவர் உறுப்பினர்கள். அரசியல் சட்டம் வகுத்துள்ள விதிகளின்படி இன்றைய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ்குமார் அவர்களும் ஆணையத்தின் உறுப்பினர்களாக சுக்பீர்சந்து அவர்களும் விவேக்ஜோசி அவர்களும் பொறுப்பில் உள்ளனர்.

தேர்தல் ஆணையத்தினுடைய பணிகள் இந்திய அரசியல் சட்டம் 324வது பிரிவின்படி, தேர்தல்களை நடத்துவதும் அதன் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் (Superintendence), வழிகாட்டுதல் (Direction), கட்டுப்படுத்துதல் (Control) ஆகிய பணிகளாகும். தேர்தல் ஆணையத்தினுடைய தலைவர் இந்தப் பணிகளில் ஆர்வமும், அக்கறையும் எடுத்துக் கொள்வதைவிட சிறப்புத் தீவிர திருத்தத்தில் (Special Intensive Revision) தீவிர கவனம் எடுத்துக்கொண்டு சிறப்புத் தீவிர திட்டப் பணிகளை மேற்கொண்டார். இந்தப் பணிகள் நேர்மையாக நடைபெறவில்லை எனவும், உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும், பல்வேறு புகார்கள் எதிர்க்கட்சிகள் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களில் எழுப்பப்பட்டது.

**இந்தச் சிறப்புத் தீவிர திருத்தம் தேர்தல் நடைபெறுவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பாக நடத்தப்பட்டமையால் பல்வேறு குளறுபடிகள் மற்றும் குறைபாடுகளை அவ்வபோது தொடர்புடைய மாநிலங்களில் எடுத்துச்சொல்லியும், தேர்தல் ஆணையம் அத்தகைய பரிந்துரைகளைப்பற்றி கிஞ்சிற்றும் பரிசீலனை செய்யாமல் தன்னிச்சையாகவே முடிவுகளை மேற்கொண்டது.**

சமீபத்தில் தேர்தல் நடைபெற்ற மாநிலங்களிலிருந்து அரசியல் கட்சியின் தலைவர்கள், சிறப்புத் தீவிர திருத்த திட்டம் அரசியல் காரணங்களின் அடிப்படையில் ஒருதலைபட்சமாக நடைபெற்றிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்கள். எனினும், தேர்தல் ஆணையம் இதுபற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாமல் தன்னிச்சையாகவே முடிவுகளை தொடர்ந்து மேற்கொண்டது. தேர்தல் ஆணையத்தின் தலைமை ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக மற்ற இரு தேர்தல் ஆணையர்களுக்கு தெரியாமலேயே திட்டமிட்டு முடிவுகளை மேற்கொண்டார் என்ற அதிர்ச்சிதரும் செய்தியினை மற்றைய இரு ஆணையர்களான சுக்பீர்சிங்சந்து அவர்களும், விவேக்ஜோசி அவர்களும் தற்பொழுது தெரிவித்த செய்திகள் அனைத்து ஆங்கில/தமிழேடுகளில் வெளிவந்து நாட்டு மக்களிடையே பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியதோடு, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளும், நம்பகத்தன்மையும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

**பொன்முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர் நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்



தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மேற்கொண்ட முடிவுகள் மற்றைய இரு ஆணையாளருக்கும் தெரியாமலேயே எடுக்கப்பட்ட முடிவுகள் என்ற நிலையிலும், மற்றைய இரு ஆணையாளருக்கும் தலைமை தேர்தல் ஆணையர் எடுத்த முடிவுகள் தொடர்பான எந்த விபரமும் தெரிவிக்கப்படவில்லை என்று அந்த ஆணையத்தின் உறுப்பினர்களே வெளிப்படையாக தெரிவித்துள்ள நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் எப்படி நேர்மையான முடிவுகளை எடுத்திருக்க முடியும் என்ற ஆழமான ஐயப்பாடு நாட்டு மக்களிடையேயும், அரசியல் கட்சிகளின் தலைவர்களிடையேயும் வினாவையும் வியப்பையும் ஏற்படுத்திருக்கிறது. தலைமை தேர்தல் ஆணையர் தன்னிச்சையான ரகசிய முடிவுகள் மேற்கொள்வதற்கு அவருடைய அரசியல் சார்பு நிலைப்பாடுதான் காரணமாகஇருக்கமுடியும்என்றஅனுமானத்திற்குதான் அனைவரும் வரமுடியும்.

**தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் இத்தகைய ஒருதலைப்பட்சமான முடிவுகளின் காரணமாக இதுவரை நடந்துமுடிந்த தேர்தல்களின் முடிவுகள் கேள்விக்குறியாகின்றன? இத்தகைய நிலைமையை உருவாக்கிய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் நடவடிக்கை என்பது தேசவிரோதசெயல் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இந்திய ஜனநாயகத்தின் மீது அசைக்க முடியாத அக்கறையும் நம்பிக்கையும் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரினுடைய திரைமறைவு நடவடிக்கைகளும், தேர்தல் ஆணையத்தின் மற்றைய இரண்டு உறுப்பினர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளாமல் இருட்டடிப்புச் செய்த அவரின் போக்கும், நியாயமான தேர்தல் நடைமுறைகளை சிதறடித்து ஒருதலைபட்சமான முடிவுகளுக்கு வழிவகுக்கும் என்ற நிலையில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்ததைத் தொடர்ந்து ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் ராஜினாமாவை தொடர்ந்து வழிமொழிந்து வருகின்றனர்.**

குறிப்பாக, இருபால் இளைஞர்களால் வழிநடத்தப்படும் “கரப்பான் ஜனதாக் கட்சியின்” (CJP) தலைவர்களும், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் ராஜினாமாவை வலியுறுத்துவதோடு அவர் மீண்டும் தொடர்ந்தால், நாங்கள் போராட்டத்தை தொடங்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகுமென எச்சரிக்கை மணியடித்துள்ளார்கள். எனவே, வேலியே பயிரை மேயவதைப் போல தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் இத்தகைய ஜனநாயகத்தை உருகுலைக்கும் நடவடிக்கைக்கு காரணமென கருதப்பட்ட தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன் பொறுப்பை காலதாமதப்படுத்தாமல், ராஜினாமா செய்ய வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்பாகும்.

தென்தமிழகத்தின் தேசியத் தலைவரான மறைந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் “தியாக வாழ்க்கையே தேசிய வாழ்க்கை” என வாழ்ந்து காட்டியவர் என்பதை நாடறியும். அப்படிப்பட்ட தேசியத் தலைவர் இந்தியநாடு விடுதலைப்பெற்ற பின்னர் ஜனநாயக அரசினுடைய அங்கங்களாக கருதப்படுகின்ற நிர்வாக அமைப்புகள் எப்படி நேர்மையாக செயல்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் வகையில், என்றும் உயிர்ப்போடு வழிகாட்டும் இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார்கள். இந்த ஜனநாயக நிறுவனங்கள் சீர்குலைந்துபோகு மேயானால், ஜனநாயகம் திசைமாறி சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்றுவிடும் என்றக் கருத்தை வலியுறுத்தும் வகையில் அவர் சொன்ன அற்புதமான வரிகள்தான்,

**“மங்கை சூதகமானால் கங்கையிலே மூழ்கலாம்!**

**கங்கையே சூதகமானால் எங்கே போவது என்பதாகும்”**

பசும்பொன் திருமகனாரின் இந்தக் கேள்வி இன்றைய நாட்டு மக்களுக்கு வெளிச்சத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை!

**எழுங்கள்! விழியுங்கள்!! இல்லையென்றால் எப்போதும் வீழ்ந்து கிடப்பீர்கள்!!!**

**என்ற எழுச்சியூட்டும் வரலாறு திரும்பட்டும்!**

## தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில்

# தி.மு.க. வெற்றி பெற்று சரித்திரம் படைக்கும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நம்பிக்கை!

*புதுச்சேரி, செப். 27-*

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்று புதுச்சேரி அரசியலில் சரித்திரம் படைக்கும் என தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேது செல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம், புதுப்பேட், சுப்பையா நகர், கவுண்டம்பாளையம், பாக்குமுடையான்பட்டு, கம்பளிசாமி மடம் பகுதிகளில் நேற்று மாலை தி.மு.க. நிர்வாகிகள் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

அதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் குண்டுபாளையம் பகுதியில், தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு திறந்தவெளி ஜீப்பில் பிரச்சாரம் செய்தார். அப்போது ஏராளமான பெண்கள் மற்றும் இளைஞர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாக்கு சேகரிப்பின்போது, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க. பொன்முடி, கொள்கைப் பரபரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் இரா. சிவா, எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எச்.எம். நாஜிம், விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் டாக்டர் ஆ. இலட்சுமணன் எம்.எல்.ஏ., வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிட மணி, அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல். சம்பத், நந்தா. டி. சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்து வாக்கு சேகரித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதியில் ஆண்களும், பெண்களும் தி.மு.க.விற்கு வாக்களிக்க தயாராகிவிட்டனர். இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று புதுச்சேரி அரசியலில் சரித்திரம் படைக்கும் என்றார்.

## மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

**நாள் : 30.09.2026**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | கருங்குழி – மகளிர் சந்திப்பு |
| 2. | மாலை 5.00 மணி | மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம் |
| 3. | மாலை 6.00 மணி | சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம் |
| 4. | மாலை 7.00 மணி | பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம் |
| 5. | இரவு 8.00 மணி | கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்) |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள்: 25.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



*மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் நகரம் 22 வது வார்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் மாவட்ட துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பம்மல் வி. தினேஷ் தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.இன்சாமாம் மதுராந்தகம் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் தேவபிரசாத் இளம் பேச்சாளர் பூபதி வட்ட இளைஞரணி அமைப்பாளர் பொன்னுமணி 127 வது பாக இளைஞரணி அமைப்பாளர் மணிமாறன் ஆகியோர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி உதய சூரியனுக்கு வாக்களித்து கழக வேட்பாளரை வெற்றி பெற செய்யுமாறு ஆதரவு திரட்டினார்கள். மதுராந்தக நகர இளைஞர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கோவை சூலூர் அருகே ஓட, ஓட விரட்டியடிப்பு!

# த.வெ.க. எம்.எல்.ஏ. மீது மக்கள் கல் வீசி தாக்கு!

## சிறைப்பிடித்து பொதுமக்கள் போராட்டம்!

*சூலூர், செப். 27 -*

கோவை சூலூர் அருகே த.வெ.க. எம்.எல்.ஏ.வை பொதுமக்கள் சிறைபிடித்து, கற்களை வீசி தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. கோவை மாவட்டம் சூலூர் அடுத்துள்ள பட்டணம் நாகம நாயக்கன்பாளையம் பகுதியில் 50 ஏக்கர் பரப்பளவில் குட்டை உள்ளது. இதில் மழைக்காலங்களில் மட்டும் வழிந்தோடி வரும் நீரை சேமித்து குடிநீர் பற்றாக்குறை சமயத்தில் பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சியில் ரூ.10.50 லட்சம் செலவில் தூர் வாரப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுக்கு முன்பாகவே ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் தண்ணீரை இந்த நன்னீர் குட்டையில் சேமிக்க திட்டமிடவே, அப்போது ஊர்மக்கள் எதிர்ப்பு காரணமாக திட்டம் கைவிடப்பட்டது. இந்நிலையில் ஆட்சி மாற்றத்துக்கு பின் சூலூர் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமார் தலைமையில் மீண்டும் குட்டை தூர்வாரப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் குட்டையை தூர்வாரி அதில் கழிவு நீரை நிரப்ப உள்ளதாக பொதுமக்கள் மத்தியில் தகவல் பரவியது.

அதிர்ச்சி அடைந்த கிராம மக்கள் குட்டையை தூர்வாரி கழிவுநீர் நிரப்ப எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் இரவு சுமார் 500க்கும் மேற்பட்டோர் கூடி ஆலோசனை நடத்தினர். இதில் கழிவு நீரை நிரப்புவதற்கு எந்த சூழ்நிலையிலும் அனுமதிப்பதில்லை என தீர்மானித்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை குட்டையை தூர்வாரும் பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைக்க சூலூர் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமார் வந்தார். அப்போது 300க்கும் மேற்பட்டோர் குட்டை பகுதியில் கூடி எதிர்ப்பு தெரிவித்தனர்.

நன்னீர் குட்டையை பாழ்படுத்தாதே, எங்கள் ஊருக்கு கழிவு நீர் தேவையில்லை என்பது போன்ற வாசகங்களை கொண்ட பதாகைகளை ஏந்தி நின்றனர். எம்.எல்.ஏ. சுகுமார், குட்டைக்குள் இறங்கி பூமி பூஜை செய்வதை பொது மக்கள் தடுத்து நிறுத்தினர். எம்.எல்.ஏ.வை சிறை பிடித்து கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது எம்.எல்.ஏ. ஆதரவாளர்களுக்கும் கிராம மக்களுக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தொடர்ந்து, போலீசார் குவிக்கப்பட்டு எம்.எல்.ஏ.வை பத்திரமாக வெளியே அழைத்து வந்தனர். அங்கேயே அவர் காத்திருந்தார்.

பின்னர் தூர்வாரும் பணிகளுக்காக 2 ஜே.சி.பி. இயந்திரங்களை எம்.எல்.ஏ. உத்தரவுப்படி குட்டைக்குள் எடுத்துச் செல்ல அவரது ஆதரவாளர்கள் முயன்றனர். அப்போது கிராம மக்கள் ஜே.சி.பி. முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சமரச பேச்சுவார்த்தை நடத்த எம்.எல்.ஏ. முயன்ற போது மீண்டும் எம்.எல்.ஏ. ஆதரவாளர்களுக்கும் கிராம மக்களுக்கும் இடையே பயங்கர தள்ளுமுள்ளு ஏற்பட்டது. திடீரென கற்களையும், தண்ணீர் பாட்டில்களையும் எம்.எல்.ஏ. மீது வீசி பொது மக்கள் தாக்க முயன்றதால் பரபரப்பு நிலவியது.

கூடுதலாக போலீசார் வரவழைக்கப்பட்டு இரு தரப்பினரிடமும் சமரச முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 5 மணி நேரத்துக்கும் மேல் பரபரப்பு நிலவிய நிலையில் தகவல் அறிந்து வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் சூலூர் தாசில்தார் செந்தில்குமார் வந்து எம்.எல்.ஏ. விடமும் பொதுமக்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர். ஏற்கனவே தூர் வாரப்பட்ட குட்டையை மீண்டும் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

இந்த குட்டையில் கழிவு நீரை நிரப்ப எம்.எல்.ஏ. தரப்பினர் முயற்சி செய்வதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் தாசில்தாரிடம் மக்கள் தெரிவித்தனர். பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாதால் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொதுமக்களை வரவழைத்து சமரச பேச்சுவார்த்தையில் ஆர்.டி.ஓ. ஈடுபட்டார்.

இதில் குட்டையில் கழிவு நீர் விடுவதில்லை என உறுதியளித்த பின்னர் தூர் வாரும் பணிகளை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. இதனால் பரபரப்பு முடிவுக்கு வந்தது.